## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை - 2014

---

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(7) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(1) பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 7**

மீளாய்வாண்டு காலப்பகுதியில் காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள், முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடுகளுக்காக வகைப்படுத்தப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் அறிக்கையிடப்பட வேண்டியிருந்த போதிலும் சபையின் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடுகளுக்குரிய வெளிப்படுத்தல்கள் சரியாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 8**

(i) புதிய கணக்கீட்டுக் கொள்கையை அறிமுகப்படுத்தும் அடிப்படையில் முன்னோக்கிய நடைமுறைத் தேவை ஏற்படும் போது கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் முன்னோக்கிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் புதிய கணக்கீட்டுக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டு பங்குச் சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டு முதலீட்டில் ஏற்பட்ட இலாப நட்டங்களைச் சீராக்கி நியாயப் பெறுமதியில் ரூபா 341.6 மில்லியன் ஆகவும் விற்பனைக்காக உள்ள நிதிச் சொத்துக்கள் ரூபா 6,638 மில்லியன் ஆகவும் வகைப்படுத்தப்பட்டு நியாயப் பெறுமதியின் வேறுபாடாக முறையே ரூபா 35 மில்லியன் இலாபத்திற்கும் ரூபா 1,468.7 மில்லியன் ஒதுக்கத்திற்கும் செலவு வைக்கும் வகையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) முன்னைய ஆண்டிற்குரிய வருமானவரி மிகை ஒதுக்கீடுகள் ரூபா 59.9 மில்லியன் தொகை முன்னோக்கிய ரீதியில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானத்தில் சேர்த்துக் காட்டப்பட்டிருந்தது.

**(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 12**

ரூபா 202 மில்லியன் பெறுமதியான வருமான வரி கடப்பாடு கணிப்பிடப்பட்ட முறைமை தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் நிதிக்கூற்றுக்களில் விரிவான தகவல் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 417.9 மில்லியன் கிரயத்திலான நிலையான சொத்துக்களினுள் 25 ஆண்டுகளுக்கு காலமாக மேற்பட்ட குறைந்து செல்லும் மீதி முறைமையின் கீழ் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்ற தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற சொத்துக்கள் காணப்பட்ட போதிலும், அதன் நியாயப் பெறுமதியினை காண்பிப்பதற்காக மீள்கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24**

சபையின் பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுடன் தொடர்புடைய தரப்பினர் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 தொடர்ந்தியங்குதல்**

சபையினால் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் 3 சதவீதமான கட்டாய வட்டி தவிர பிரேரிக்கப்பட்ட வருடாந்த இலாப சதவீதம் 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வரை 7 சதவீதமாக பேணப்பட்டிருந்தது. இந்த இலாபப்பங்கை பிரேரிப்பதற்காக போதியளவில் வருடாந்த செயற்பாட்டு மிகையொன்று சபையிடம் இல்லாதிருந்தமையால் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை முறையே 746 மில்லியன், ரூபா 2,089 மில்லியன் ரூபா 473 மில்லியன் மற்றும் ரூபா 492 மில்லியன் முன்னைய ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிலும் இலாப பகிர்வு ஒதுக்கத்திலிருந்தும் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திலிருந்தும் பெற்றுகொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக முறையே ரூபா 2,596 மில்லியன் மற்றும் ரூபா 2,684 மில்லியன் தொகையான தேறாத இலாபம் முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் இலாப கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இதனால் வருடாந்த இலாப பங்கு வீதம் 7 சதவீதமாகப் பேணிச் செல்வதற்கு மேலும் இலாப பங்கை சமப்படுத்தும் ஒதுக்கம் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்களைப் பயன்படுத்துவதற்கு ஊக்கமளித்தல் சபை எதிர்காலத்தில் தொடர்ந்து இயங்குவதற்கு பாதகமானதாக தாக்கமளிக்காது என்பதை புறக்ணிக்க முடியாது.

**2.2.3 அங்கத்தவர் கணக்குகளில் செலவு வைக்கப்படாத உதவு தொகை**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கத்தவர் நிதியக் கணக்கு மீதி ரூபா 193,868 மில்லியன் என நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தபட்டபோதும், 2015 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வரையில் உள்ளபடியாக அங்கத்தவர் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்த தொகை ரூபா 173,670 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் இந்தப் பணத்தில் ரூபா 20,198 மில்லியன் தொகை 2015 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வரையிலும் ஒவ்வெரு அங்கத்தவர் கணக்கிலும் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. இதில் ரூபா 11,754 மில்லியன் தொகை 2014 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த போதிலும் 2015 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வரையிலும் கணக்கீடு செய்யப்படாத அங்கத்துவப்பணம், வட்டி மற்றும் இலாபம் ஆகும். எஞ்சிய ரூபா 8,444 மில்லியன் தொகை 1981 ஆம் ஆண்டு முதல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான கடந்த 34 வருட காலப்பகுதியின்போது கிடைத்திருந்த போதும் இது வரையிலும் கணக்கீடு செய்யப்படாத அங்கத்துவப் பணம், வட்டி மற்றும் இலாபமாகும். முன்னைய ஆண்டின் அங்கத்துவக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாத மீதி ரூபா 9,496 மில்லியனாக இருந்ததுடன் அது மீளாய்வாண்டின் போது ரூபா 8,118 மில்லியன் வரை 14.5 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த போதிலும் நடப்பாண்டிற்கு முன்னர் கிடைத்த அங்கத்தவர் பங்களிப்புப் பணம் கணக்கீடு செய்யும் நடைமுறையில் போதியளவான முன்னேற்றம் காணப்படவில்லை.

**2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மொத்த முதலீட்டு உழைப்புக்களிலிருந்து வருடாந்தம் 3 சதவீதத்திற்கு குறையாத வட்டியை நிதியத்தின் அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 5,287 மில்லியன் தொகையான 3 சதவீதமான வட்டித்தொகையை செயற்பாட்டுச் செலவினமாக கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் செயற்பாட்டு மிகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போதும் இவ்வாறு வட்டிப் பணம் அதிகரித்துக் கணக்கு வைக்கப்பட்டமையால் அந்த ஆண்டின் செயற்பாட்டு மிகையும் ரூபா 4,752 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மூலதன இலாபமாக நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 772 மில்லியன் தொகை 2014 சனவரி 01 இல் உள்ளவாறு கிரயத்திற்குரிய கணக்கிடப்பட்ட இலாபமொன்று அல்லாதமையால் மீளாய்வாண்டின் விரிவான வருமானம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின்போது விரிவான வருமானக்கூற்றில் மூலதன இலாபமாக அதிகரித்து செலவு வைக்கப்பட்ட தொகை ரூபா 171.9 மில்லியனாகும்.

(இ) மீளாய்வாண்டின்போது கணக்காய்விற்கு வழங்கப்பட்ட முதலீட்டுப் பதிவேட்டில் சிலவற்றைப் பரீட்சித்த போது எந்தவித அங்கீகாரமும் இன்றி 15 கம்பனிகளின் பங்குகள், கிரயத்தைவிட குறைந்த விலையில் பங்குச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டமையால் ரூபா 213.5 மில்லியன் நட்டம் பெறப்பட்டிருந்தது. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 39 இன் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் 2014 ஆம் ஆண்டின்போது பங்கு வகைப்படுத்தப்பட்டு நட்டத்தில் விற்பனை செய்யப்பட்ட பங்குகளின் கிரயம் பங்குச் சந்தையின் பங்கு விலைக்கு எதிராக பதிவழிக்கப்பட்டமையால் பெறப்பட்ட ரூபா 213 மில்லியன் நட்டம் பங்குக் கொடுக்கல் வாங்கல்களில் உழைக்கப்பட்ட ரூபா 64 மில்லியன் இலாபமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக இந்த நிலைமையின் அடிப்படையில் 24 கம்பனிகளின் பங்குகள் விற்பனையால் உழைக்கப்பட்ட ரூபா 191 மில்லியன் இலாபமொன்று ரூபா 381.6 மில்லியன் இலாபமாக நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் முதலீடுகளிலிருந்து உழைக்கப்பட்ட இலாபங்கள் பங்குலாபம் பிரேரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். எனினும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி பிணை முறிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 155,280 மில்லியன் தொகைக்காக மீளாய்வாண்டின் போது கிடைக்க வேண்டியிருந்த உள்ளபடியான வட்டி வருமானமான ரூபா 12,445.8 மில்லியன் தொகையை மீளாய்வாண்டில் அங்கத்தவர்களுக்கு பங்குலாபம் வழங்குவதற்காக பயன்படுத்துவதற்குப் பதிலாக ரூபா 15,130 மில்லியன் தொகையான நிலையான வட்டியைப் பயன்படுத்தி ரூபா 2,684 மில்லியன் தொகையான தேறாத இலாபமொன்று அங்கத்தவர்களுக்கு பங்குலாபம் செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்தையும் உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 417.9 மில்லியன் பெறுமதியான தொகையான நிலையான சொத்துக்களை பௌதீக ரீதியில் உறுதி செய்யும் பொருள் மெய்மையாய்வு அறிக்கை.

(இ) சபையின் முதலீட்டுக் கொள்கைக் கூற்றுக்கான 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் பெறப்பட்ட அமைச்சரவையின் அங்கீகாரம்

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்து வரும் உரிமை கோரப்படாத மரண நலன்கள் ரூபா 9 மில்லியன் தொகை, 2001 ஆம் ஆண்டிலிருந்து வரும் நிறுத்தி வைக்கப்பட்ட நலன்கள் ரூபா 14 மில்லியன் தொகை, விண்ணப்பிக்கப்படாத நலன்கள் ரூபா 4.8 மில்லியன் தொகை மற்றும் தபால் திணைக்களத்திலிருந்து காசுக் கட்டளைகளினூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட பங்களிப்புப் பணம் ரூபா 1.4 மில்லியனும் ஆக ரூபா 29 மில்லியன் கூட்டுத்தொகையான அங்கத்தவர் பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) 9 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 1.5 மில்லியன் கூட்டுத்தொகையான கடன் பணத்தை அறவிடுவதற்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 02 வங்கிக் கணக்குகள் 8 வருடங்களுக்கு அண்மித்த காலமாக கொண்டுவரப்படுகின்ற தேறாத காசுக் கட்டளைகள் மற்றும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 1,091,284 தொகை மற்றும் 7 வங்கிக் கணக்குகளில் இனங்காணப்படாத வேறுபாடுகள் ரூபா 130,305 என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|---|
| (அ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 8(எ) மற்றும் (ஏ) பிரிவுகள் | ஒவ்வொரு வருடத்திற்காகவும் முதலீட்டில் பிரேரிக்கப்பட்ட பெறுமதி, கொள்வனவு விலை மற்றும் சந்தைப் பெறுமதிகளைக் காண்பிக்கின்ற முதலீட்டுப் பிரேரணையொன்று தயாரிக்கப்பட்டு அடுத்த வருடத்தின் செப்தெம்பர் 30 இற்கு முன்னர் அமைச்சசருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2013 பெப்ரவரி 05 ஆம் திகதிய டிஎம்எஸ்/சீ2/2/42 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள கடிதத்தின் 02 ஆம் பந்தி | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைமைக்கு முரணாக பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட புதிய சம்பள படிநிலைகள் 2013 மே 01 ஆம் |

| | | |
|---|---|---|
| | | திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 1963 திசெம்பர் 12 அம் திகதிய 1024/600/29 சீடீ ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபையின் நிதிச் செயலாற்றல் நடைமுறைக் கோவைக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2013 பெப்ரவரி 15 ஆந் திகதிய 2013/03 ஆம் இலக்க நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவின் சுற்றறிக்கை | வாகனத்திற்காக கடன் பணம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு 05 வருட காலம் கடக்கும் வரை மீண்டும் வாகனக் கடனொன்று வழங்க முடியாதிருந்த போதிலும், 05 வருட கால எல்லையை விஞ்சுவதற்கு முன் சபையின் 18 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 15 மில்லியன் தொகையான வாகனக் கடன் மீண்டும் வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் விளைவுகள் ரூபா 17,132 மில்லியன் மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 15,368 மில்லியனாக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,764 மில்லியன் ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதி மீளாய்வு

கடந்த 07 ஆண்டுகளில் சபையின் அங்கத்தவர்களின் மொத்த உரிமைத்துவம், அந்த உரிமைத்துவங்களுக்குரிய மொத்த பங்களிப்புப் பணம் மற்றும் திரண்ட வட்டி என பகிரப்பட்ட விதம் என்பன கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | மொத்த பங்களிப்புப் பணம் | திரண்ட வட்டி | திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கத்தவர்களின் உரித்து |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2008 | 42,735 | 46,134 | 88,869 |
| 2009 | 48,396 | 54,661 | 103,057 |
| 2010 | 55,242 | 64,610 | 119,852 |
| 2011 | 62,758 | 72,728 | 135,486 |
| 2012 | 71,563 | 82,068 | 153,631 |
| 2013 | 81,347 | 92,905 | 174,252 |
| 2014 | 90,587 | 103,281 | 193,868 |

மேற்படி தகவல்களின்படி, 2014 ஆம் ஆண்டளவில் சபையின் அங்கத்தவர்களுக்கு உரித்துடைய மொத்தத் தொகையில் 46.73 சதவீதம் பங்களிப்புப் பணமாகவும் 53.27 சதவீதம் ஒட்டுமொத்த வட்டியாகவும் இருந்தது. அதனை 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் அங்கத்தவர்களின் மொத்த உரித்து 11.26 சதவீதம் அதிகரித்திருந்ததுடன், மொத்த பங்களிப்புப் பணத்திலும் 11.36 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3.3 நிறுவகத்தினாலும் நிறுவகத்திற்கு எதிராகவும் தொடரப்பட்டுள்ள சட்ட சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சட்டமா அதிபரிடம் வினவாமல் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மீறியதற்கு சபைக்கு எதிராக வழங்கப்பட்ட பாதகமான நீதிமன்ற தீர்ப்பொன்றின் அடிப்படையில் தனியார் கம்பனியொன்றிற்கு இழப்பீடாக ரூபா 21 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் சபையால் இவ்வழக்குத் தீர்ப்பிற்கு எதிராக வணிகநீதிமன்றத்தில் செய்யப்பட்ட மேன்முறையீட்டின் பிரதிபலனாக முறைப்பாட்டுக் கம்பனியால் மேற்குறித்த பெறுமதிக்கு சமமான வங்கி பிணைப்பொறுப்பொன்று நீதிமன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இத்தொகை சபைக்கு கிடைக்க வேண்டிய தொகையொன்றாக கணக்கிடப்பட்டிருந்த போதிலும், இக்கொடுப்பனவு பாதகமான வழக்குத் தீர்ப்பொன்றின் அடிப்படையில் ஏற்பட்டிருந்தமையால் இத்தொகை மீளக் கிடைப்பதில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்டது. எவ்வாறாயினும் குறித்த நீதிமன்ற செயற்பாடு 2015 யூன் 30 ஆம் திகதி வரையிலும் முடிவடைந்திருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டு முதல் மீள் மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்படாது 2 கம்பனிகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட முதலீட்டு ஆதனங்களில் மீளாய்வாண்டின் இறுதியின் போது சபைக்கு ரூபா 13 மில்லியன் அறவிட வேண்டியிருந்தது. இந்தத் தொகையில் ரூபா 5 மில்லியனை மாத்திரம் அறவிடுவதற்காக ஒரு கம்பனிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் இறுதியில் செயலாற்றல் நிலைமை பின்வருமாறிருந்தது.

| விபரம் | உள்ளவாறான எண்ணிக்கை | நிதியத்தின் செயற்பாட்டுடன் தொடர்புடைய எண்ணிக்கை |
|---|---|---|
| தனியார் மற்றும் பகுதியளவு அரச துறையைச் சார்ந்த ஊழியர்கள் | 3,723,947 | 2,400,000 |
| சேவை வழங்குபவர்கள் | 235,872 | 74,276 |
| நிதியத்தின் அங்கத்தவர் கணக்குகளது எண்ணிக்கை (மில்லியன்) | 12.0 | 2.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2014

1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 20(1) ஆம் பிரிவில் 1988 இன் 47 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 7 ஆவது பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சுய தொழில் வழங்குனர்கள் ஆட்சேர்க்கப்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள 2,687,257 சுயதொழில் வழங்குனர்களில் நிதியத்திற்கு அங்கத்தவர்களாக சேர்ப்பதற்கு 36,912 அங்கத்தவர்கள் அல்லது மொத்த எண்ணிக்கையில் 1.37 சதவீதத்தை மாத்திரமே முடியுமானதாக இருந்தது. இதற்காக

2015 யூன் 30 ஆந் திகதி வரையில் கிடைத்த பங்களிப்புப் பணம் ரூபா 148 மில்லியன் ஆகும்.

(ஆ) கடந்த 7 ஆண்டு காலத்தின் போது சபையினால் அமுல்படுத்திய புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டங்களுக்குரிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | நிதியத்திற்கு பங்களிப்பு வழங்கிய செயற்படு அங்கத்தவர்களது எண்ணிக்கை | தமது பிள்ளைகளின் பொருட்டுப் புலமைப் பரிசில்களைப் பெற்ற அங்கத்தவர்களது எண்ணிக்கை | 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் கிரயம் | உயர்தர புலமைப்பரிசில் கிரயம் | மொத்த புலமைப்பரிசில் கிரயம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா |
| 2008 | 2,100,000 | 2,497 | 26,084,760 | - | 26,084,760 |
| 2009 | 2,100,000 | 3,000 | 46,811,006 | - | 46,811,006 |
| 2010 | 2,100,000 | 3,000 | 45,385,680 | - | 45,385,680 |
| 2011 | 2,100,000 | 6,669 | 74,051,599 | 23,640,000 | 97,691,599 |
| 2012 | 2,200,000 | 6,962 | 75,775,685 | 23,604,000 | 99,379,685 |
| 2013 | 2,200,000 | 6,982 | 84,124,844 | 17,888,234 | 102,013,078 |
| 2014 | 2,400,000 | 7,301 | 84,975,000 | 19,632,000 | 104,607,000 |
| | | | 434,208,574 | 84,764,234 | 521,972,808 |

மீளாய்வாண்டின் போது 2,400,000 பேரைக் கொண்ட ஒட்டுமொத்த அங்கத்தவர்களில் 7,301 பேருக்கு மாத்திரமே புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன. கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலாதுள்ள புலமைப்பரிசில் சித்தியடையாத ஏனைய பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கும் அவர்களை அறிவூட்டுவதற்கும் முறையான வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை, சுழற்சிக் கணக்கு மற்றும் தொழில் தருனர் எண்ணிக்கை போன்ற தரவுகள் ஊழியர் சேமலாப நிதியத்தின் தரவுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஊழியர் சேமலாப நிதியத்தின் பிரகாரம் | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பிரகாரம் |
|---|---|---|
| மொத்த அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை | 15,400,000 | 12,000,000 |
| பங்களிப்புப் பணம் அனுப்பும் சுழற்சி கணக்குகளின் எண்ணிக்கை | 2,400,000 | 2,400,000 |
| தொழில் தருனர்களின் எண்ணிக்கை | 71,000 | 74,276 |
| 2014 இல் செலுத்தப்பட்ட நலன்களின் சதவீதம் (வட்டியுடன்) | 10.5 | 10.0 |

மூலம் : 2014 இன் இலங்கை மத்திய வங்கி அறிக்கை

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்களின் அங்கத்தவர்களைப் போல சுயதொழில் வழங்குனர்களும் பங்களிப்புச் செய்வதற்கு முடியுமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஒப்பாக இலங்கை அடைந்துகொள்ளல் போதியளவில் காணப்படவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 சனவரி 01 இல் உள்ளவாறு பதிவழிக்கப்பட்டு முன்கொண்டுவரப்பட்ட பங்குச் சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் விற்பனை செய்வதற்காக முதலீடாகக் காண்பிக்கப்பட்ட முதலீட்டில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 கம்பனிகளின் பங்கு விலைகளின் அதிகரிப்பு ரூபா 723 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 சனவரி 01 இல் உள்ளவாறு அந்த 18 கம்பனிகளின் சராசரிக் கொள்வனவுக் கிரயத்தின் பிரகாரம் பங்குச் சந்தையின் பெறுமதி அதிகரிப்பு ரூபா 123.9 மில்லியனாக இருந்தது. அவ்வாறே சாதகமற்ற கொள்வனவுக் கிரயம் பதிவழிக்கப்பட்டு சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் பங்கு விலை கணக்கீடு செய்யப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் பங்குச் சந்தையின் சந்தை பெறுமதி அதிகரிப்பு நலன் 83 சதவீதத்தினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2008 மார்ச் 03 ஆந் திகதிய 01/2008 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கையின் மூலம் அரசாங்க வங்கி தவிர ஏனைய எந்த நிதி நிறுவனமும் அரசாங்கத்திற்கு நேரடியாக அல்லது கட்டாய கடப்பாட்டுடன் நிதியினை முதலீடு செய்தல் உடனடியாக அமுலாகும் வகையில் நிறுத்தப்பட்ட வேண்டியமை அறிவிக்கப்பட்டிருக்கும் போது இரண்டாம் சந்தையில் 2 தனியார் நிதி நிறுவனங்களிலிருந்து 2014 திசெம்பர் 24 ஆந் திகதியும் 2015 மே 21 ஆந் திகதியும் முகப்பெறுமதி ரூபா 250,000,000 மற்றும் ரூபா 462,549,361 தொகையான திறைசேரி பிணை முறிகள் ரூபா 292,504,500 மற்றும் ரூபா 578,158,948 தொகைகள் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 175,573.8 மில்லியன் பெறுமதியான திறைசேரி பிணைமுறிகள் கொள்வனவு செய்யப்பட்டு இலங்கையில் திறைசேரி பிணைமுறிகளைக் கொள்வனவு செய்யும் முதன்மை நிறுவனங்களில் ஒன்றாக கருதி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை 2015 யூன் மாதம் 30 ஆந் திகதி வரையிலும் நேரடியாக இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி பிணை முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு பதிவு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது சபையினால் வணிக வங்கியொன்றில் பேணிச் செல்லப்பட்ட சேமிப்பு கணக்கொன்றில் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 500 மில்லியனுக்குக் அண்மித்த சராசரியான வங்கிமீதியும் 2014 ஆகஸ்ட் மாதம் முதல் 2015 சனவரி மாதம் வரையான காலத்தின் போது ரூபா 700 மில்லியன் முதல் ரூபா 1,933 மில்லியன் வரையிலான வங்கி மீதியும் பேணிச் செல்லப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது இந்த வங்கிக் கணக்கில் சபைக்குக் கிடைத்த வட்டி வருமானம் ரூபா 27 மில்லியனாக இருந்தது. இந்த கால எல்லையில் சபையினால் அந்தப் பணம் நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டிருக்குமாயின் அண்ணளவாக ரூபா 49 மில்லியன் மொத்த வட்டி வருமானமொன்றை உழைத்திருக்க முடியும்.

(உ) செயற்பாடற்ற ஆடைக் கம்பனியொன்றில் 178,700 பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக முதலீடு செய்யப்பட்ட ரூபா 4 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் இல்லாதிருந்ததாகக் காண்பித்து இக் கம்பனி 5 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக உத்தியோகபூர்வ பட்டியலில்

இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அந்த முதலீட்டிலிருந்து சபைக்கு எந்தப் பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை.

(ஊ) கம்பனியின் தொகுதிகளின் வாக்குறுதிச் சீட்டுக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 12 மில்லியன் மற்றும் தொகுதிக் கடன்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 7 மில்லியன் முறையே 2002 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் தேற வேண்டியிருந்த போதிலும் அந்தப் பணத்தை வசூலிப்பதற்கு 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சபைக்கு முடியாதிருந்தது.

(எ) தோட்டக் கம்பனியொன்றிலிருந்து அறவிடவேண்டியிருந்த ரூபா 12 மில்லியன் தொகுதிக் கடன் வட்டி 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின்போது 15 கம்பனிகளின் பங்குகள் கிரயத்தை விட குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டமையால் ரூபா 213.5 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின்போது 6 கம்பனிகளின் பங்கு விற்பனையில் பெறப்பட்ட நட்டம் ரூபா 22 மில்லியனாகும்.

(ஐ) சபையினால் 1997 ஆம் ஆண்டின் போது நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் 1,000,000 பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 10 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இந்த பங்குகள் பொறுப்பு நிதியத்தில் முதலீட்டுத் தொகையில் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை 18 வருட காலத்தின் போது எவ்வித பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும் உரிய கால எல்லையில் 5 சதவீதமான ஆகக் குறைந்த வட்டி வீதத்தின் கீழ் ஆக இருந்த போதிலும் இந்தப் பணத்தை முதலீடு செய்திருப்பின் அதன் மூலம் பெறக்கூடியதாக இருந்த மதிப்பிடப்பட்ட மொத்த வருமானம் அண்ணளவாக ரூபா 14 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் பல வருட காலமாக எவ்வித பிரதிபலனும் கிடைக்காத இந்தப் பங்குகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கிரயம் ரூபா 10 ஆன பங்கொன்றின் சந்தைப் பெறுமதி ரூபா 137.72 ஆகத் தீர்மானிக்கப்பட்டு ரூபா 127.7 மில்லியன் கணக்குகளில் சீராக்கி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஒ) 2014 ஆம் ஆண்டின் போது சபையினால் 12 கம்பனிகளின் 7,740,783 பங்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 775 மில்லியன் தொகையான பங்குகளின் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு முதலீட்டிலிருந்து சபைக்கு எவ்வித வருமானமொன்றும் கிடைத்திருக்கவில்லை. இந்த முதலீட்டில் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதில் நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்ற கணனி கம்பனியொன்றில் ரூபா 2 மில்லியன் மற்றும் முன்னைய காலப்பகுதியில் தொடர்ச்சியாக நட்டமடைந்த கம்பனியொன்றில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 2 மில்லியன் தொகையும் உள்ளடக்கியிருந்தது. கடந்த 5 ஆண்டு காலப்பகுதியில் அவ்வாறு வருமானம் எதுவும் கிடைக்காத சபையின் நிதி முதலீடுகளுடன் தொடர்புடைய கம்பனிகளது விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | கம்பனிகளின் எண்ணிக்கை | முதலீட்டுப் பங்குகளின் எண்ணிக்கை | முதலீட்டுத் தொகை |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 2010 | 17 | 4,111,468 | 119,083,880 |
| 2011 | 18 | 7,683,979 | 163,867,080 |
| 2012 | 25 | 13,046,750 | 226,125,038 |
| 2013 | 24 | 18,817,090 | 700,560,142 |
| 2014 | 12 | 7,740,783 | 775,039,968 |

(ஓ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது பங்குச் சந்தையில் செய்யப்பட்ட முதலீடு, முதலீட்டிற்கு கிடைத்த வருமானம் மற்றும் வருமானத்தின் சதவீதங்கள் தொடர்பான விபரமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | கம்பனிகளின் எண்ணிக்கை | பங்குகளின் எண்ணிக்கை | முதலீட்டுத் தொகை 2014 சனவரி 01 இல் உள்ளவாறு | பெறப்பட்ட முதலீட்டு வருமானம் | வருமானத்தின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | |
| 2011 | 130 | 78,211,481 | 5,204,377,279 | 703,052,274 | 13.5 |
| 2012 | 107 | 101,999,123 | 7,713,939,116 | 324,179,030 | 4.2 |

சபையினால் விரிவானதொரு முதலீட்டுப் பிரேரணை சமர்ப்பிக்கப்படாமையினால் பங்குச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட முதலீட்டு வருமானம் மற்றும் வருமான சதவீதம் மற்றும் 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளில் இலாப நிலைக்குரித்தான விடயங்களை இந்த அறிக்கையில் காண முடியாதிருந்தது.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

சபையானது கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச்சட்டத்தின் கீழ் இயங்கும் நிறுவனம் எனக் குறிப்பிட்டு மேலதிக நேர வேலை ஒரு மணித்தியாலத்திற்கு ஒன்றரை மணித்தியாலமாகவும் சனிக்கிழமை / ஞாயிற்றுக் கிழமை மற்றும் அரச விடுமுறை தினங்களில் 8 மணி மேலதிக நேர வேலை முடிந்ததும் நாட் சம்பளமும் சேர்த்துக்கொள்ளப்பட்டு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்படுவதால் மீளாய்வாண்டின் போது மேலதிக நேர வேலைக் கிரயம் ரூபா 21 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. மேற்குறித்த அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கு சபையின் உத்தியோகத்தர்கள் ஒரு வாரத்தில் ஐந்தரை நாட்கள் பணியாற்ற வேணடியிருந்ததுடன் வருடாந்த விடுமுறை 21 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அதற்கு முரணாக உத்தியோகத்தர்களுக்கு வருடாந்தம் விடுமுறை 42 நாட்களாகவும் வாரம் ஒன்றிற்கு 5 நாட்கள் வேலையை நிறைவேற்றுவதற்கும் இடமளிக்கப்பட்டிருந்தது.

### 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சபைக்குரிய 3 வாகனங்களின் விற்பனையில் மீளாய்வாண்டின்போது ரூபா 2 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133(2) இன் பிரகாரம் சபையின் முதலீடு, கொள்வனவு மற்றும் சட்ட விதிகளைப் பின்பற்றுதல் போன்ற பிரதான நடவடிக்கைகளை மேவுகை செய்யப்படும் வகையில் உள்ளகக் கணக்காய்வு திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

சபையின் பாதிடப்பட்ட செலவினத்திற்கும் வருமானத்திற்கும் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுபாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பணம்
(இ) முதலீடு
(ஈ) அங்கத்தவர் கணக்குகளை பராமரித்தல்